18th July 1957]

தோடு சேர்ப்பது ஆலோசனையில் இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் சம்பள விகிதத்தை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் யோசனை நடந்துக்கொண்டிருக்கிறது. யாருக்கும் குறைக்கவில்லை.

Sri S. LAZAR : Sir, in the matter of granting dearness allowance to teachers, non-gazetted officers, etc., is there any proposal before the Government to adopt the system obtaining in Western countries, namely, to give family allowance when an employee gets married, and subsequently to give children allowance, when the married couple beget children?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I am afraid here we will have to discourage people begetting more and more children. Once we begin to give allowance for children, I do not know where it will end. I do not think the present is not the time to consider the suggestion even if it is desirable.

Sri M. P. SARATHY : நமது மாகாணத்தில் திருப்பதி தேவஸ்தானத்தினால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு இந்த 'அலவன்ஸ்' கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது ஏன் என்பதை தெரியப்படுத்தக் கோருகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் இதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்தி சொல்லுவதற்கு இல்லை. ஆனால் இதுபற்றி என்ன செய்வது என்பதையும் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் எலிமெண்டரி பாடசாலையில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்களுக்கு இந்த 'டியர்னஸ் அலவன்ஸ்' கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்களுக்கு இந்த 'அலவன்ஸ்' கொடுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? இதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : முனிசிபாலிடியில் இம்மாதிரி ஒரு கேள்வி போட்டால் அதற்கு அவர்கள் காரணம் சொல்லக்கூடும். அப்படி ஏதேனும் காரணம் சர்க்கார் கவனத்துக்கு வருமேயானால், அந்தக் காரணத்தை ஆராய்கிறேன்.

Sri A. GOVINDASAMI : சம்பளம் ரூபாய் 7, பஞ்சப்படி ரூபாய் 5, ஆக மொத்தம் ரூபாய் 12 கொடுக்கப்படுவதாக கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். பஞ்சப்படி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நிறுத்தப்படுமாதலால், இந்த 'அலவன்ஸை' அடிப்படை சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : அடிப்படை சம்பளத்தை எவ்வளவு உயர்த்த முடியும் என்பது பரிசீலனையில் இருக்கிறது. இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்தவுடன் சம்பள விகிதத்தை நிர்ணயித்துவிட்டு, பாக்கி யிருப்பதை 'டியர்னஸ் அலவன்ஸாக' கொடுக்கலாம்.

(Sri K. Vinayakam எழுந்தார்.)

Sri S. B. ADITYAN : On a point of order, Sir. கேள்வியைக் கேட்கும் அங்கத்தினர் சபைக்கு வராமல் இருக்கும்பொழுது, அவருக்கு பதிலாக மற்றொரு அங்கத்தினர் அந்தக் கேள்வியைக் கேட்பதாக இருந்தால், கேள்வி போட்ட அங்கத்தினர் அதற்கு சம்மதம் கொடுக்க வேண்டுமல்லவா?